SOND

SOND Better World Movement

*இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.*

*T.P:- 077-3314262* *E-Mail:-senthu@eureka.lk* *web:-www.sond.lk*

# மாதாந்த அறிக்கை

கார்த்திகை, 2012.

## Social Organizations Networking for Development

**RKM Road**
**Akkaraipattu**

**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**



# இதழின் உள்ளே

1. அம்பாறை
2. யாழ்
3. மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.(Create a conducive Society for Good Environment for the Future).**

சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் பற்றி உணர்வுட்டலை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல் திட்டத்தின் கீழ் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் செயற்பட்டுவரும் திருநாவுக்கரசு வித்தியாலயம் மற்றும் அக்கரைப்பற்று பிதேச செயலாளர் பிரிவில் உள்ள அல் - பதுார் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மரங்கள் 15/11/2012 அன்று நடுகை செய்யப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்குகொண்டனர்.





SOND

# நிதியின்றிய செயற்திட்டங்கள்

அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூவினத்தினையும் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### கலந்துரையாடல்கள்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 4 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது இக் கலந்துரையாடலின் போது 4 திரைப்படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டுள்ளது.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. இம் மாதம் 11,25 ஆகிய திகதிகளில் காந்தி கழக சிறுவர்களுக்கு 04 சிங்கள மொழி கற்பித்தல் வகுப்புக்களானது கழக உறுப்பினர்களில் ஒருவரான செல்வி சஜித்தா அவர்களினால் நடாத்தப்பட்டது. இவ் நான்கு வகுப்பிலும் 32 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

02. எமது அலுவலகத்தில் சிறு மரக்கறித் தோட்டம் அமைப்பதற்குத் தேவையான பயிர் விதைகளை சிறுவர்கள் வீட்டில் பதியம் போட்டு பயிர்களை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. காந்தி கழக சிறுவர்களுக்கு இரண்டு கணனி வகுப்புக்கள் SOND பணியாளரான ஜெனிதா அவர்களினால் நடாத்தப்பட்டது.

02. காந்தி கழக சிறுவர்களுக்கு இரண்டு ஆங்கில வகுப்புக்கள் SOND பணியாளரான சுரேஸ்குமார் அவர்களினால் நடாத்தப்பட்டது.





SOND

## கணனிப் பயன்பாடு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனி அறிவினை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அலுவலகத்தில் இலவச கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாதம் 10 சிறுவர்களினால் 21 தடவைகள் கணனிகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.





## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 8 தலைப்பில் 299 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.

ஸ்ரீசித்தி விநாகர் ஆலய அறநெறி சிறுவர்களிற்கு எமது எமது நூலகத்தில் காணப்படும் புத்தகங்கள் மற்றும் இறுவெட்டுக்கள் தொடர்பாக தெரியப்படுத்தும் நிகழ்வு 2012.11.17 ம் திகதி எமது அலுவலகத்தில் நடைபெற்றது. இதனடிப்படையில் நூலகத்திற்கு புதிதாக 17 அங்கத்தவர்கள் இணைந்துள்ளார்கள்.



SOND

## திரைப்படக் காட்சி

ஒவ்வொரு வாரத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளில் எமது அலுவலகத்தில் அறநெறிபாடசாலை மாணவர்களுக்கான திரைப்படம் காண்பித்தல் நடைபெற்று வருகின்றது இதனடிப்படையில் இம்மாதம் 3 திரைக்காட்சிகளில் 85 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.





## அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இந்து சமயத்தில் உள்ள விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட வழிபாட்டுமுறைகளை மாணவர்களுக்கு எவ்வாறு கற்பித்தல் என்பது தொடர்பாகத் தெளிவுபடுத்தும் கருத்தரங்கு அக்கரைப்பற்று சொண்ட் அமைப்பின் ஏற்பாட்டிலே **17/11/2012** அன்று காலை 10.00 மணிக்கு திருவாளர் பொன்னுத்துரை சிவசர்மா குருக்கள் , சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் அவர்களால் நடாத்தப்பட்டது.17 அசிரியர்கள் பங்குபற்றியதுடன் மேலதிக தெளிவினையும் பெற்றுக்கொண்டார்கள்.





# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## Mine Risk Education
## மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டம்

### Experience Exchange Visit to Tellipalai community Based MRE

**யுனிசெப் நிறுவனத்தின் அனுசரனையுடன் ஈராக் நாட்டின் மிதிவெடி அபாயக்கல்வி அணியினரின் வருகையை முன்னிட்டு (21,22,23 .11.2012) நடாத்தப்பட்ட செயற்பாடுகள்**

21.11.2012 யுனிசெப் நிறுவனத்தின் அனுசரனையுடன் மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டின் மூலம் மிதிவெடி மற்றும் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவியாக 25000.00 ரூபா வழங்கப்பட்டது. இதில் பிரதேசசெயலர் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், ஈராக் அணியினர் மற்றும் பயனாளிகள்,பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

21.11.2012 தெல்லிப்பளை பிரதேசத்தில் மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டத்தின் போது மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட பயனாளி திரு ஆ.சந்திரலிங்கம் சேந்தான்குளம் J/222 அவர்களுக்கு வாழ்வாதார உதவியானது (02.02.2011) கடந்த வருடம் வழங்கப்பட்டது. இதனை ஈராக் குழுவினர் பார்வையிட்டு அவரிடம் வாழ்வாதாரத்தின் பயன்பாட்டினையும் அதன் வருமானம் பற்றியும் கலந்துரையாடினார்கள்.













SOND

## மிதிவெடி அபாயக் கல்வி விழிப்புணர்வு

22.11.2012 வீட்டுத்தரிசிப்பின் மூலம் மருதன்கேணி நாகர்கோவில் கிழக்கு J/424 சென் பீற்றஸ் தேவாலய வீதியில் மிதிவெடி அபாயக்கல்வியினை களப்பணியாளர்கள் வழங்கியுள்ளார்கள்.

21.11.2012 அன்று தெல்லிப்பளை பிரதேசத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட யா/நகுலேஸ்வரம் மத்திய மகாவித்தியாலத்தில் மிதிவெடி அபாயக்கல்வி பணியாளர்கள் கலந்து கொண்டு பாடசாலை மட்டத்தில் அனர்த்தம் தொடர்பான விளக்கங்கள் படவரைபின் மூலம் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டதுடன் அதனை ஈராக்குழுவினரும் பார்வையிட்டனர்.

மருதன்கேணி நாகர்கோவில் கிழக்கு J/424 முருகன் கோவில் வீதியில் மிதிவெடி அபாயக்கல்வியினை களப்பணியாளர்கள் அக்கிராமத்தின் மக்களை ஒன்றினைத்து மிதிவெடி பற்றிய விழிப்புணர்வினை வழங்கியதுடன் ஈராக் குழுவினரும் அச்செயற்பாடுகளைக் கண்காணித்தனர்.

23.11.2012 அன்று SOND அலுவலகத்திற்கு வருகைதந்த ஈராக் நாட்டின் மிதிவெடி அபாயக்கல்வி அணியினர் அங்கு மதியபோசனத்தில் கலந்து கொண்டனர். எமது பணியின் பங்களிப்பினை பாராட்டி அவர்களால் ஞாபகப்பரிசில்களும் வழங்கப்பட்டது.

**27.11.2012 National Mine Action Group (NMAG )** குழுவினரினால் எமது மிதிவெடி அபாயக்கல்வி பணியாளர்களின் வேலையின் தன்மைகள், தரவுகள் சேகரிப்புக்கள் நாளாந்த பணிகள், அறிக்கைகள் என்பனவற்றை மீள் பரிசீலனை செய்யப்பட்டது.











SOND

**Non State Actors in Development Project அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்**

**01.06.11.2012** திகதி J/287 அச்சுவேலி மேற்கு கிராம சேவகர் பிரிவின் செல்வநாயகபுரம் ,செல்வா சன சமூக நிலைய மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் காணிகச்சேரி நடைபெற்றது.இதில் 86 பேருக்கு காணிஉறுதி வழங்குவதற்காக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

15.11.2012 திகதி யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி வளாகத்திலும், அண்மையிலுள்ள தோட்டங்களிலும் பாதீனம் செடி ஒழிப்பு தொடர்பான சிரமதானம் காலை 08.45 தொடக்கம் 10.30 மணிவரை நடைபெற்றது. இதில் பீடாதிபதி,மாணவர்கள் **SOND EU NSA Staff** உட்பட சுமார் 500 பேர் இச்சிரமதானத்தில் பங்குபற்றினர்.

16.11.2012 திகதி வெள்ளிக்கிழமை **SOND** அலுவலகத்தில் பொது ஒருங்கிணைப்புக்குழு ,மக்கள் மன்ற அங்கத்தவர்களுடான கலந்துரையாடல் இடம்பெற்றது.இதில் 46 பேர் கலந்துகொண்டார்கள்.













SOND

## Homestead garden Project

### வருமானம் தரும் வீட்டுத்தோட்ட திட்டம்

தெல்லிப்பளை பிரதேசத்தில் 500 பயனாளிகளுக்கான வீட்டுத்தோட்ட நடுகை முறை பற்றிய விழிப்புணர்வு குழுக்களை ஒன்றினைத்து ஒவ்வொரு கிராம பணியாளர்களுடனும் திட்டப்பெறுப்பாளர் ஜெகலோஜினியினால் நடாத்தப்பட்டது. இதில் பழமரக்கன்றுகள் நடுகைசெய்வது பற்றி தெளிபடுத்தப்பட்டது. 385 பயனாளிகள் பங்குபற்றினார்கள்.

பழமரக்கன்று விநியோகமானது சம்பிரதாய பூர்வமாக 14.11.2012 அன்று வித்தகபுர கிராம சேவகர் அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதோடு அன்றைய நாள் 6கிராமங்களுக்குமான தென்னை ,வாழை, பழமரக்கன்றுகள் மற்றும் மரக்கறி விதைகளும் விநியோகம் செய்யப்பட்டது.





## Inclusive Economic Development (IED) - ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்திதிட்டம்

மேற்குறிப்பிட்ட திட்டத்தின் கீழ் யாழ் சக்தி நிலையத்தினால் உற்பத்திசெய்யப்படும் பருத்தித்துறை தட்டைவடையின் தரத்தை மேலும் அதிகரித்து அதிக இலாபத்தினை பெறுவதற்கான பயிற்சியானது திருமதி சடாச்சரதேவி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. இதில் 12 பேர் பங்குபற்றினார்கள்.

திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வீட்டுத் தோட்டப் பயிற்சியானது திரு.லோகநாதன் ஐயா தலைமையில் 28,29.11.2012 ம் திகதி நடை பெற்றது இதில் 99 பேர் கலந்து கொண்டுளார்கள். இப் பயிற்சி நடை பெற்ற பின்னனர் பயனாளிகளுக்கான பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டது.







## Homestead garden Project

### வருமானம் தரும் வீட்டுத்தோட்ட திட்டம்

27.11.2012 அன்று அம்பிளாந்துறை கிராமத்தில் வீட்டுத்தோட்டம் செய்கை பண்ணும் விவசாயிகளுக்கான மூலிகை செடிகளின் விபரங்களும் அதன் பயன்பாடு தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. திரு. மாணிக்கப்போடி அவர்கள் உயிரோட்ட வேலி மற்றும் நடுகை முறை சம்பந்தமாக விளக்கமளித்தார்.

26.11.2012 அன்று மட்டக்களப்பு சொண்ட அலுவலகத்தில் வீட்டுத்தோட்ட திட்டம் தொடர்பான கலந்துரையாடல் Christian Aid நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் திரு. ராஜன் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலுக்கு எமது அமைப்பின் தலைவர் மற்றும் இணைப்பாளர் அடங்கலாக ஊழியர்களும் கலந்துகொண்டனர். யாழ்பாணம் ,மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் திட்ட முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் எமது அமைப்புடனான இணைந்த செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெற்றது.





### மக்கள் பங்களிப்புடன் இயற்கை வளங்களை பாதுகாத்தல்

மக்கள் பங்களிப்புடன் இயற்கை வளங்களை பாதுகாத்தலுக்கான செயற்திட்டத்தின் கீழ் பெரிய உப்போடை கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 60 பயனாளிகளுக்குமான சேதன உரம் தயாரித்தலும் பயிரினங்களை நடுகை செய்தலுக்குமான கருத்தரங்கு 30.11.2012 எமது அலுவலகத்தில் இடமபெற்றது. இதில் பிரதேசத்தின் விவசாய போதனாசிரியர் செல்வி மனோகரி அவர்கள் வளதாரியாக கலந்து கொண்டு பயற்சியினை வழங்கியதுடன் பழமரக்கன்றுகள் மற்றும் விதையினங்களையும் வழங்கிவைத்தார்.





SOND

காணி தொடர்பான ஆவணங்களை ஆவணப்படுத்தல்

**USAID** நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெற்றுவரும் "காணி தொடர்பான ஆவணங்களை ஆவணப்படுத்தலின் ஊடாக முரண்பாட்டினை தணித்தல்" எனும் தொனிப்பொருளிலான திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணையாளருடனான கலந்துரையாடல் 2012.12.03 அன்று மாவட்ட செயலக காணி சீர்திருத்த ஆணையாளரின் அலுவலகத்தில் இடம்பெற்றது இதில் சொண்ட் நிறுவனம் சார்பில் இணைப்பாளர் மற்றும் நிகழ்ச்சி திட்ட உத்தியோகஸ்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.





எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் **.(Create a conducive Society for Good Environment for the Future).**

டயக்கோனியா நிறுவனத்தின் அனுசரணையில் அமுல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ் மாதிரி பண்ணை அமைக்கும் விவசாயி திரு குணரெட்ணம் அவர்களுடனான ஒப்பந்தம் 2012.12.05 அன்று எமது அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.





## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.